அவ்வகையில் தமிழர் வாழ்வியல் கூறுகளில் ஒன்றான நீதி முறைமையின் சிறப்பினை அறிவதற்குப் பெரியபுராணம் சிறந்த சான்றாக விளங்குகின்றது. பெரியபுராணம் காட்டும் தமிழர்களின் தொன்மையான நீதி முறைமையே உலகில் பல

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நீதி முறைமைக்கு அடித்தளமாக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தும் சைவ சான்றோர் மத்தியில் நிலவுகிறது (இரத்தினவேல் பாண்டியன், 2000). அவ்வகையில் மலேசிய நீதி முறைமையைப் பெரியபுராணம் காட்டும் நீதி முறைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில் தமிழர்களின் நீதி முறைமை எத்தகைய ஆளுமையை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் காண முடியும்.

## 1.2 ஆய்வுப் பின்னணி

சைவ சமயம் மிகவும் தொன்மையான சமயம். கிருஸ்துவ மதம் தோன்றுவதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சைவம் எனும் பெருஞ்சமயம் தோன்றியுள்ளதைச் சிந்து வெளி நாகரிக அகழ்வாராய்ச்சியாளர் சர் ஜோன் மார்ஷல் குறிப்பிடுகிறார் (வைத்தியநாதன், 1995). உலகில் உள்ள பல சமயங்களுக்குத் தோற்றுனர் என்று ஒருவர் இருக்கின்றார். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைமுறையில் இருக்கும் சைவ சமயத்திற்குத் தோற்றுவர் எனவரும் இலர். ஆக, இறைவனே சைவ சமயத்தின் தோற்றுனன் என்று சைவ பெருமக்கள் அறுதியிட்டுக் கூறுவர் (நாகப்பன் ஆறுமுகம், 2008).

சங்க காலத்தில் சைவ சமயம் சிறப்புற்று இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்களில் வரும் கூற்றுகள் சான்றாக அமைகின்றன. கி.மு. 400இல் தோன்றிய தொல்காப்பியர் அருளிய தொல்காப்பியத்தில் சைவ சமயத்தின் பரம்பொருளான சிவபெருமானைச் சுட்டுகின்ற வரிகள் இடம்பெற்றுள்ளன,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்

(தொல், பொருள் 640)

அது போலவே, புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, திருக்குறள், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சங்க இலக்கிய நூல்களில் சிவ வழிபாடும் சிவபெருமானைப் பற்றியச் செய்திகளும் பரவிக் கிடக்கின்றன. இத்துணைச் சிறப்பு வாய்ந்த சிவ வழிபாடு சமணம் மற்றும் பௌத்தம் எனும் பரம்பொருள் கொள்கையற்ற சமயங்களின் வரவால் தோய்வுற்றது (இராசமாணிக்கனார், 1990).

அவ்வகையில் கி.பி. 500 வரை தமிழ் நாட்டில் சமண பௌத்த மதங்கள் பெரும் ஆதரவைப் பெற்றிருந்தன (இராசேந்திரன், 2011). பல்லவர்கள் ஆட்சியின்கீழ் தமிழகம் சிக்குண்டிருந்தது. சமண சமயம் தலைத்தோங்கிய காரணத்தினால் சைவ சமயம் புறக்கணிக்கப்பட்டது; சிவன் கோயில்கள் அடைக்கப்பட்டன; சிவ வழிபாடு மறுக்கப்பட்டது. இது சைவ சமயத்தின் இருண்ட காலம் என்பது சைவ சமய சான்றோர் கருத்து (இராசமாணிக்கனார், 1990). ஆனால், கி.பி. 700 முதல் கி.பி. 1200 வரை, சைவ சமயத்தின் பொற்காலமாகும். சைவ சமயத்தை அதன் தோய்விலிருந்து மீட்டெடுக்கும் பெரும் முயற்சியில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி.பி. 700இல் தமிழகத்தில் சீர்காழியிலும் திருவாய்மூரிலும் திருஅவதாரம் செய்தனர். இவர்களின் தோற்றம் சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக் காலம் எனப்பட்டது (ஞானசம்பந்தன், 1999).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கோயில்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டுத் திருமுறைகளை அருளி சமணம், பௌத்தம் எனும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பரம்பொருள் நம்பிக்கையற்ற சமயத்தில் மூழ்கிக் கிடக்கும் மக்களின் அறியாமையைப் போக்கி சைவ சமயத்தை மீட்டெடுத்துள்ளனர். இவர்களின் வருகையால் இருண்டிருந்த தமிழகம் மீண்டும் சைவ ஒளி பெற்றதைப் பன்னிரு திருமுறை வரலாற்றின் வழி அறிய முடிகின்றது (வெள்ளைவாரணன், 2008).

திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசரைத் தொடர்ந்து சைவ சமயத்தின் மீட்சிக்குப் பெரும் பங்காற்றியவர் சுந்தர மூர்த்தி நாயனார் (ஆறுமுக நாவலர், 1997). கி.பி. 840இல் சுந்தரரின் திருஅவதாரத்தினால் சைவம் மேலும் மீட்சி அடைந்திருக்கின்றது. சுந்தரரின் திருஅவதாரம் ஒர் உண்ணத நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டது என்று சேக்கிழார் பெருமான் பாடுகிறார் (சாமி தியாராசன், 1994).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட
தீது இலாத்திருத் தொண்டர் தொகைதரப்
போது வான்அவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கன்னினார்

(பெ.பு, திருமலைச் சிறப்பு, பாடல் 35)

பெரும் தவம் செய்த தென்னாடு சிறந்த வாழ்வதற்குத் தீது இல்லாத திருத்தொண்டர் தொகையினை அருள்வதற்காகச் சுந்தரரைச் சிவபெருமான் பூவுலகில் அவதாரம் செய்வித்தான் என்பது சேக்கிழார் வாக்கு (இராமசுப்பிரமணியம், 2002).

கி.பி. 700 முதல் கி.பி. 840 வரை திருக்கோயில்களில் பாடப்பட்ட மூவர் (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர்) திருமுறைகள் வடக்கே வந்த ஆரிய மாயையால் மறைக்கப்பட்டுள்ளன. மூவர் திருமுறைகள் திருக்கோயில்களில் புறம் தள்ளப்பட்டு ரிக் வேத மந்திரங்கள் ஓதப்பட்டுள்ளன. மேலும் மூவர் அருளிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ் வேதங்களான திருமுறைகள் தில்லை சிதம்பரத்தில் யாரும் அறியா வண்ணம் ஓர் அறையில் பூட்டப்பட்டிருந்தன (வெள்ளைவாரணன், 2008).

கி.பி. 1000இல், அபயகுலசேகரன் எனும் சிறப்புப் பெயருடைய இராச இராச சோழன் மூவர் அருளிய ஓரிரு திருமுறைகளைக் கேட்டு, உயிரை உய்யச் செய்யும் திருமுறைகளைத் தேட முற்பட்டுள்ளார். எங்குத் தேடியும் திருமுறைகள் கிடைக்கப் பெறவில்லை. அக்காலத்தில் திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகளைப் பற்றி அறிந்து அவர் வாயிலாகத் திருமுறைகள் தில்லைச் சிதம்பரத்தில் இருப்பதைக் கேள்வியுற்று அதனை மீட்டெடுக்கும் முயற்சியில் தில்லைவாழ் அந்தணர்களைச் சந்தித்துத் திருமுறைகள் இருக்கும் அறையினைத் திறக்கக் கூறியுள்ளார் (கோவிந்தராசனார் & தெய்வ நாயகம், 2010).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆயினும் 'மூவர் வந்தாலொழிய திருக்கதவைத் திறக்க முடியாது', என்று தில்லைவாழ் அந்தணர்கள் கூறியதைக் கேட்டு, மூவர் திருவுருவச் சிலையினை அலங்காரமாகப் பெரு வீதி வழியே ஊர்வலம் நடத்தி திருக்கதவைத் திறக்கச் செய்தார் இராச இராச சோழன். பல திருமுறை ஓலைகள் சிதைந்து போகவே மனம் கலங்கினார் மன்னன். "ஈண்டு, வேண்டுவது வைத்தே மற்றவை மண்மூடச் செய்தோம்" என்று இறைவன் அசரீரியாக உரைத்ததைக் கேட்டு, மூவர் அருளிய திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்துத் தரும்படி வேண்டினார் இராச இராச சோழன் (கிருஷ்ணன், 2015).

அவ்வாறே மூவர் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிகள், சுந்தரர் அருளிய திருத்தொண்டர் தொகையினை வழி நூலாகக் கொண்டு அடியார் பெருமைகளைப் பறைசாற்றும் வண்ணம் திருத்தொண்டர் திருவந்தாதியை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அருளினார். சுந்தரர் காலத்திற்குப் பின்னரும் பல திருமுறை ஆசிரியர்கள் திருமுறைகளை அருளி சைவத்தின் பெருமைகளை மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர் (இராசமாணிக்கனார், 1990).

அறுபத்து மூன்று நாயன்மார்கள் சுந்தரர் காலத்து முற்பட்டும் அவர் காலத்தும் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்கின்றனர் (இராசமாணிக்கனார், 1990). கி.பி. 700 முதல் கி.பி. 1200 வரை சைவம் பெரும் சிறப்போடு தமிழகத்தில் இருந்துள்ளதைப் பல சமய சான்றோர்களின் ஆராய்ச்சியின் வழி காண முடிகின்றது. இதனைப் பத்தி இயக்கக் காலம் என்கின்றனர் சமய அறிஞர்கள் (ஞானசம்பந்தன், 1999).

கி.பி.1200இல் சேக்கிழார் திருஅவதாரம் புரிந்து சுந்தரரின் திருத்தொண்டை தொகையையும் நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் கொண்டு நாயன்மார்களின் வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணம் எனும் பெருங்காப்பியமாக வடித்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

பெரியபுராணம் என்பது வெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றினை விரித்துரைக்கும் கற்பனைக் காவியம் அல்ல. மாறாக, தமிழர்களின் வாழ்க்கை நடைமுறையினைப் படம்பிடித்துக் காட்டும் வாழ்வியல் நூல். இன்றைய நவீன நகர வாழ்வியலில் தமிழர்களின் பண்பாடுகளும் கலாச்சாரங்களும் மறக்கப்படுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழர்களின் வாழ்வியல் முறை தொழில் நுட்ப வளர்ச்சியில் தாக்குண்டு மேற்கத்திய பாணியில் மாற்றம் கண்டு வருகின்றது (திருச்செல்வம், 2016).

தமிழர்களின் வாழ்வியல் முறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்களின் பழம்பெரும் நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் மறந்து தங்களின் சுய நலத்தைக் கருத்தில் கொண்டு செயல்படுகின்றனர். இதனால் பல்வேறு நிலைகளில் நடு நிலைமையின்றி செயல்படத் தலைப்படுகின்றது. பெரியபுராணம் காட்டும் நீதி முறையை இக்கால தமிழர்களின் வாழ்க்கை நடைமுறைக்கு எவ்வாறு உகந்ததாக இருக்கும் என சிந்திக்கத் தோன்றுகின்றது.

மேலும், சங்க இலக்கியங்களில் நீதி, அரசியல் மற்றும் சட்டம் தொடர்பான செய்திகள் மிக அரிதாகக் காணப்படுகின்றன. பொதுவாக அகம், புறம், கொடை போன்ற செய்திகள் பரவலாகக் காணப்படினும் நீதி தொடர்பான செய்திகள் பெரியபுராணத்தில் மிகுந்து காணப்படுகின்றன. அவற்றை முறையாக அடையாளம் காணும் வழி தமிழர்களின் சீரிய சிந்தனையின் வெளிப்பாட்டை அறிய முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அதோடு மட்டுமல்லாது, பொதுவாகவே நமது பார்வையில் உயிர் என்பதை மனித உயிரோடு மட்டும் தொடர்பு படுத்தும் வழக்கம் உண்டு. ஆனால், சைவ சமயம் உயிர் கொள்கையைப் பற்றிப் பேசுகையில், அது மனித உயிர் மட்டுமல்லாது அனைத்து உயிர்களையும் குறிக்கின்றது (வைத்திய நாதன், 1995). அவ்வகையில் பெரியபுராணத்தில் காட்டப்படும் நீதி முறைமையானது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது என்பதை மனு நீதிச் சோழனின் வாழ்வின் வழி காண முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பெரியபுராணத்தில் சுட்டுவது போலவே தற்கால உலக நீதி முறைகள் ஆக்ககரமான சூழலை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. காலத்தின் பழமை வாய்ந்த வாழ்வியல் கூறுகளைக் கருத்தில் கொண்டு தற்கால நடப்பு நீதிமுறைகள் திகழ்கின்றன என்பது உண்மை. அவற்றில் மலேசிய நீதிமுறைமையும் ஒன்றாகும். அனைவருக்கும் நியதி என்ற தாரக மந்திரத்தின் செயல்பாடாக விளங்கும் மலேசிய நீதிமுறைமை பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் அக்கால நீதிமுறைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது பல நல்ல தகவல்களைத் தரவல்லது.

தற்போது மலேசிய நாட்டில் அமலில் உள்ள நீதி முறைமை, பெரியபுராணம் காட்டும் நீதி முறைமையையோடு ஒப்பிடுகையில் அவை எவ்வகையில் ஒற்றுமை உடையது என்பதையும் அறிய வழிவகுக்கின்றது. மலேசிய நாட்டின் நீதி முறைமை பிரிட்டிஷ் நாட்டின் நீதி முறைமையைப் பின்பற்றியது. மலேசிய நாட்டின் பெரும்பாலான சட்ட திட்டங்கள் பிரிட்டிஷ் நாட்டின் சட்டதிட்டங்களின் அடைப்படையில் அமைக்கப்பட்டவை (Wu Min Aun, 1994).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆனால், பெரியபுராணம் தமிழகத்தைச் சேர்ந்த சேக்கிழார் பெருமானால் அருளப்பட்டமையால் அது தமிழ் நாட்டின் கூறுகளையும் தமிழர் மரபினையும் கொண்டது. ஆக, பெரியபுராணம் காட்டும் நீதி முறைமை அந்நாட்டின் நீதி முறைக்கு அடித்தளமாக அமைந்திருக்கக் கூடும் என்பதை நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் (2000) குறிப்பிட்டுள்ளார். தமிழ் நாடும் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தமையால் பிரிட்டிஷ் நாட்டின் சட்ட திட்டங்களை உருவாக்குவதற்குப் பெரியபுராண நீதி முறைமை வழி வகுத்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அவ்வகையில் மலேசிய அரசியலைப்புச் சட்டதிட்டங்களையும் சைவ அடியார்களின் வாழ்வினைக் கூறும் பெரியபுராணத்தினையும் பொருத்திப் பார்க்கும் போது பல நுட்பமான நீதி முறைமை இரு தரப்பிலும் ஒத்திருக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன. எனவே, நமது பண்டைய மரபுகளின் பெருமை காலத்தின் அழியா பெருமை என்பதை அடையாளம் காட்ட பெரியபுராண நீதி முறைமையை மலேசிய நீதி முறைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சிறந்த வழிமுறையாக அமையும்.

அதோடுமட்டுமல்லாது இன்றைய இளையர்களுக்குக் குறிப்பாகப் பள்ளி மாணவர்கள் மத்தியில் பத்தி இலக்கியங்கள் சுட்டும் தமிழர்களின் வாழ்வியல் நெறிகள் அறியப்படாமல் உள்ளன. குறிப்பாக அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வாயிலாகப் பெரியபுராணம் சுட்டும் நீதி முறையை அறியப்படாமல் உள்ளது. ஆக, தற்கால மலேசிய கல்விச் சூழலுக்கு ஏற்ப நாட்டின் அரசியல் சட்டத்தோடு பெரியபுராண நீதி முறைமையை ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும் நம் தமிழர் சமூகம், சமயம் என்ற பேரில் பல்வேறு மூட நம்பிக்கைகளில் சிக்கித் தவிக்கின்றனர். பல்வேறு சமய இயக்கங்கள் நாட்டில் செயல்பட்டு வருவதாலும் அவை மக்களுக்கு அறிவார்த்தமான சமய சிந்தனை வளர்க்க முயற்சிப்பதாலும் பெரியபுராணம் சுட்டும் வாழ்வியல் முறைகளைக் கண்டறிவது அவசியமாகின்றது. தமிழர்களைக் குறிப்பாக இந்துக்களை மூட நம்பிக்கையிலிருந்து மீட்டெடுத்துத் தமிழர் கையாண்ட நீதிமுறையையும் பிற வாழ்வியல் நெறிகளையும் தெளிவிப்பதற்காக மலேசிய நீதி முறைமையோடு பெரியபுராண நீதிமுறைமையை ஒப்பிடுவது வேண்டடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.4 ஆய்வின் நோக்கம்

மனித வாழ்வினை நெறிப்படுத்துவதற்கு நீதி முறைமை ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. அத்தகைய நீதி முறைமை தமிழர்களின் பெருங்காப்பியமான பெரியபுராணத்தில் அடியார்களின் வரலாற்றில் சேக்கிழார் பெருமானால் எழுதப்பட்டுள்ளது. இந்நீதி முறைமை தற்காலத்தில் மலேசிய நீதி முறைமையோடு ஒத்துப் போகும் தன்மையினையும் காண முடிகின்றது. அவ்வகையில் இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது:

i. பெரியபுராணம் காட்டும் நீதி முறைமையை அடையாளம் காணுதல்.
ii. பெரியபுராணம் காட்டும் நீதி முறைமையை ஆராய்தல்.
iii. பெரியபுராண நீதி முறைமையை மலேசிய நீதி முறைமையோடு ஒப்பிடுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு வினா

இவ்வாய்வு பின்வரும் வினாக்களுக்குப் பதில் காணும் வகையில் அமையப்பெற்றுள்ளது:

i. பெரியபுராணம் காட்டும் நீதி முறைமை யாவை?

ii. எந்தெந்த நாயன்மார்களின் வாழ்வில் நீதி முறைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


iii. எந்த வகையில் நாயன்மார்களின் வாழ்வில் நீதி முறைமை வெளிப்படுத்தப்படுகின்றது**?**

iv. எவ்வகையில் பெரியபுராண நீதி முறைமை அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாக அமைந்துள்ளது**?**

v. பெரியபுராண நீதி முறைமை மலேசிய நீதி முறைமையோடு எவ்வாறு ஒத்துள்ளது**?**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**1.6 ஆய்வுத் திட்டக் கட்டமைப்பு**




*படவரைவு 1.1.* ஆய்வுத் திட்டக் கட்டமைப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வின் முக்கியத்துவம்

நாயன்மார்கள் வாழ்க்கையின் வாயிலாகப் பெரியபுராணம் உணர்த்தும் நீதி முறைமையை இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. முந்தைய காலங்களில் பெரியபுராணத்தில் காணப்படும் தமிழர்களின் பல்வேறு வாழ்வியல் கூறுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுள்ளன. அடியார்களின் பத்தி, தொண்டு, இல்லால் உயர்வு, விருந்தோம்பல், தமிழர்களின் பழக்க வழக்கங்கள் என பல்வேறு கூறுகள் பலவகையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் நீதி முறைமை எனும் கூறு அதிகம் ஆராய்ப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. அவ்வகையில் பெரியபுராணத்தில் காணப்படும் நீதி முறைகளை இந்த ஆய்வின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும் இந்த ஆய்வு சமய ஆய்வாளர்களுக்கு ஒரு புதிய சிந்தனையை ஏற்படுத்த வகை செய்கிறது. பெரியபுராணத்தில் சிந்திக்க வேண்டிய இன்னும் பல்வேறு கூறுகள் அடங்கியுள்ளன என்ற சிந்தனையை ஆய்வாளர்களுக்கு இந்த ஆய்வு ஏற்படுத்துகிறது. இதன் வழி பெரியபுராணம் எனும் தமிழரின் பெருங்காப்பியம் பல்வேறு கூறுகளில் ஆய்வு செய்யப்பட்டுத் தமிழர் நல்வாழ்விற்கு வழித்துணையாக அமையும். அதோடுமட்டுமல்லாது பெரியபுராணத்தை ஆய்வு செய்யும் பிற ஆய்வாளர்களுக்கு இவ்வாய்வு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

இவ்வாய்வு பெரியபுராண நீதி முறைமையையும் தற்கால மலேசிய நீதி முறைமையையும் ஒப்பிடுவதால், தமிழர்களின் நீதி முறைமை உலகம் போற்றும் வகையில் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. தற்கால நீதி முறைமைக்குத் தமிழர்களின் நீதி முறைமை ஒரு முன்னோடியாகத் திகழ்திருக்க வாய்ப்புள்ளது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்பதையும் இவ்வாய்வின் வழி அறிய வழி வகுத்துள்ளது. இதன் வழி நீதி துறைக்குத் தமிழர்களின் அளப்பரிய பங்களிப்பைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்ப் பள்ளிகளிலும் இடைநிலை மற்றும் உயர்கல்விக் கூடங்களில் தமிழ்மொழியினைப் பாடமாகப் பயிலும் மாணவர்களுக்குப் பத்தி இலக்கியமும் கற்றுத் தரப்படுகின்றது. அவ்வகையில் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும் இடைநிலை மற்றும் உயர்கல்விக் கூட மாணவர்களும் பெரியபுராணத்தில் சுட்டப்படும் நீதி முறைமை எனும் கூற்றினைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இவ்வாய்வு ஒரு மேற்கோளாகவும் துணை நூலாக அமைகிறது.

மலேசியாவில் பல்வேறு சமய இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மக்களைக் குறிப்பாகத் தமிழர்களை மூட நம்பிக்கையிலிருந்து மீட்டு அறிவார்த்தமான சமய சிந்தனையை வளர்க்க முயற்சித்து வருகின்றன (மகேஸ்வரி தேவராஜீ, 2020). அவ்வகையில், தமிழர்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றான நீதி முறைமை எவ்வாறு தமிழர் வாழ்வில் கடைபிடிக்கப்பட்டுள்ளது என்பதை அச்சமய இயக்கங்கள் அறிந்து மக்களுக்கு எடுத்துரைக்க இவ்வாய்வு பெரிதும் துணை புரிகிறது. அதோடு சமய இயக்கங்களுக்கு மேற்கோள் நூலாகவும் இவ்வாய்வு அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதுவரை பக்தி இலக்கியம் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் பன்னிரு திருமுறைகளில் பல்வேறு கூறுகளில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் இவ்வாய்வு 12ஆம் திருமுறையில் செய்யப்பட்ட மேலும் ஓர் ஆய்வாகும். இந்த ஆய்வானது தமிழர்களின் பத்தி வாழ்விற்கு மேலும் ஓர் அணி சேர்க்கும் ஆய்வாகத் திகழ்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.8 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு பன்னிரு திருமுறைகளில் பன்னிரெண்டாம் திருமுறையாகப் போற்றப்படும் பெரியபுராணத்தை முதன்மை நூலாகக் கொண்டது. முதலாம் திருமுறை முதல் பதினொறாம் திருமுறை முதல் தோத்திர நூலாக அமைந்த திருமுறைகள் பன்னிரெண்டாம் திருமுறையான பெரியபுராணம் தோத்திரமாக மட்டுமல்லாது சரித்திர நூலாகவும் அமைந்துள்ளது. சிவபெருமானை மட்டும் வழிபட்டு அவன்பால் பத்தி வைராக்கியம் செலுத்தி அவன் திருவடி நிழலை அடைந்த நாயன்மார்களின் சரித்திர வாழ்க்கை ஆய்வின் எல்லையாக அமைகின்றது. இவர்களின் வாழ்க்கை வரலாறு தமிழ் கூறு நல்லுகிற்குப் பல்வேறு படிப்பினைக் காட்டுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பல்வேறு தமிழர் நெறிகள் பெரியபுராணத்தில் காணப்படினும் இவ்வாய்வு நீதி முறைமை எனும் நெறியினை மட்டும் உட்படுத்தியது. அவ்வகையில் நீதி முறைமை வெளிப்படுத்தப்பட்ட சில நாயன்மார்கள் வரலாறு மட்டுமே ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. பின்வரும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றில் காணப்படும் நீதி முறைமை எனும் நெறி இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது:

i. சுந்தர மூர்த்தி நாயனார் (கி.பி. 840 – கி.பி. 865)
ii. அமர்நீதி நாயனார் (கி.பி. 400 – கி.பி. 600)
iii. கோட்புலி நாயனார் (கி.பி. 840 – கி.பி. 865)
iv. புகழ்ச்சோழர் (கி.பி. 400 – கி.பி. 600)
v. கழற்சிங்கர் (கி.பி. 840 – கி.பி. 865)
vi. செறுத்துணை நாயனார் (கி.பி. 840 – கி.பி. 865)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


vii. மெய்ப்பொருள் நாயனார் (கி.பி. 660 – கி.பி. 840)

viii. திருநீலகண்டர் (கி.பி. 660 – கி.பி. 840)

ix. இடங்கழியார் (கி.பி. 600 – கி.பி. 840)

x. எறிபத்த நாயனார் (கி.பி. 400 – கி.பி. 600)

மேற்கண்ட நாயன்மார்கள் மட்டுமல்லாது பெரியபுராணத்தில் போற்றப்பட்டுள்ள மனுநீதிச் சோழனின் வாழ்க்கை வரலாறும் இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் மேற்குறிப்பிட்ட நாயன்மார்கள் மற்றும் மனு நீதிச் சோழனின் வரலாற்றில் நீதி தொடர்பான செய்யுள்கள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பெரியபுராணம் மட்டுமல்லாது இவ்வாய்விற்கு வலு சேர்க்கும் வகையில் பிற நூல்களும் ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளன. பத்தி இலக்கிய நூல்கள், பன்னிரு திருமுறைகள், நீதி துறை நூல்கள், மலேசிய சட்டதிட்டங்கள், திருக்குறளில் நடுவு நிலைமை எனும் 12வது அதிகாரம் ஆகியன இந்த ஆய்விற்கு உதவும் பொருட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 கலைச்சொல் விளக்கம்

இவ்வாய்வின் உள்ளடகத்தைப் படிப்போர் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் சில கலைச் சொற்களின் விளக்கம் அவசியமாகின்றது. அவ்வகையில் ஆய்வாளர் சில கலைச் சொற்களின் விளக்கத்தினை இங்கு விளக்கியுள்ளார். அவ்வகையில் பெரியபுராணம், நீதி முறைமை, பதி ஞானம், பசு ஞானம், தற்போதம், முத்தி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



ஆணவம், அநாதி போன்ற சைவ சித்தாந்தம் தொடர்பான சொற்கள் விளக்கப்படுகின்றன.

1. பெரியபுராணம்

12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமானால் அருளப்பட்ட நூல் இது. இந்நூலில் சேக்கிழார் பெருமான், சிவபெருமானை வழிபட்டு முத்தியடைந்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினையும், ஒன்பது தொகையடியார்கள் மற்றும் பிற சிவனடியார்கள் குறிப்பாக மனு நீதிச் சோழன் பற்றியச் செய்திகளைச் சான்றுகளோடு பாடியுள்ளார். இந்நூல் பன்னிரு திருமுறைகளில் பன்னிரெண்டாவது திருமுறையாகத் திகழ்கின்றது (வெள்ளைவாரணன், 2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2. நாயன்மார்கள்

மெய்ப்பொருளை நாடிச் செல்பவர்கள் அடியார்கள் அவர்களே நாயன்மார்கள் என்பார் முனைவர் அ. ச ஞானசம்பந்தம். தமிழகத்தில் வாழ்ந்து சிவபெருமானை மட்டுமே வழிபட்டு முத்தியடைந்த அடியவர்களே நாயன்மார்கள். இருண்ட காலத்தில் பத்தி நெறி பரப்பியவர்கள் (மூர்த்தி, 2011). நாயன்மார்கள் என்றால் தலைவர்கள் என்றும் பொருள்படும்.

3. அறங்கூறவையம்

நீதி வழங்குவதற்கு இயங்கிய ஓர் அமைப்பாகும். சங்க காலத்தில் இது பேரூர்களில் செய்பட்டு வந்துள்ளது. இவை அவை அல்லது அவைகளம் என்றும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அழைக்கப்பட்டுள்ளன. மன்னனால் தேந்தெடுக்கப்பட்ட சான்றோர்கள் இவ்வறங்கூறவைத்தில் அறங்கூறவையத்தாராக செயல்பட்டுள்ளனர் (இராசமாணிக்கனார், 2018).

4. நீதி முறைமை

நீதி எனும் சொல்லுக்கு 'நியாயம்', 'முறைமை', 'மெய்' எனும் பொருள்கள் உள்ளன (கழக அகராதி, 2010). சுப்பு ரெட்டியாரின் கூற்றுப்படி நீதி என்பது நீதி நூல்களில் கூறப்படும் உண்மைகள். ஒவ்வொரு நாடுகளிலும் பிரகடனம் செய்யப்பட்டு அமலாக்கப்படும் நீதியை இது குறிக்கின்றது. தேவைக்கும் நடைமுறைக்கும் ஏற்ப நீதி நூல்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு அமல்படுத்தப்படும். தற்கால நடைமுறையில், சட்ட மன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களே நீதியாகக் கூறப்படுகின்றது (சுப்பு ரெட்டியார், 1988). முறைமை என்பது அரசநீதி, மரபு முறை என்ற பொருளை உடையது. முறைமை என்ற சொல்லை நெறிமுறை தவறாது செய்தல் என சுப்பு ரெட்டியார் கூறுகிறார் (1988). அறத்தை முதன்மைப் படுத்திக் கொடுக்கப்பட்ட தீர்ப்புகளிலும் அரசியல் சட்டத்தை முதன்மைப் படுத்திக் கொடுக்கப்பட்ட தீர்ப்புகளிலும் நீதி முறைமை முதன்மையாகக் கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாயன்மார்களின் வாழ்க்கையில் நீதி தொடர்புடைய செயல்களே நீதி முறைமை எனும் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது.

5. பதி ஞானம்

சைவ சித்தாந்த கோட்பாட்டின்படி உயிர்கள் பெறுகின்ற ஞானம் இருவகைப்படும். அவ்வகையில் தன் செயலாவது எதுவும் இல்லை; அனைத்தும் இறைவன் செயல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்ற நிலை ஏற்படும் போது உயிருக்குத் திருவருள் வாய்க்கப் பெறும். திருவருள் வாய்க்கப் பெற்ற உயிரின் அவறிவானது இறையறிவாக வெளிப்படும். இதுவே பசு ஞானம் என சைவ சித்தாந்தம் குறிக்கின்றது. இச்சொல் நாயன்மார்கள் பெற்ற ஞான நிலையை விளக்கப் பயன்படுத்தப்படுகின்றது (வைத்தியநாதன், 1995).

6. பசு ஞானம்

திருவருள் வாய்க்கப் பெறாத உயிர், தானே அனைத்தும் செய்கின்றேன் என்ற தன்முனைப்போடு செயல்படும்போது அதன் அறிவு பசு ஞானம் அல்லது உயிரறிவு எனப்படும் (மூர்த்தி, 2011). இச்சொல் நாயன்மார்கள் பசு ஞானத்தை விடுத்து பதி ஞானத்தை அடைந்த நிலையை விளக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

7. முத்தி

முத்தி எனும் சைவ சித்தாந்த கலைச்சொல் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. நாயன்மார்கள் இறைவன் திருவருளால் உயிர் பிறவா நிலையை அடைவதுவே முத்தி. சைவத்தில் உயிர் சிவத்தோடு இரண்டறக் கலத்தல் எனப்படும். உயிரின் ஆணவ மறைப்பு முற்றாக நீங்கி சிவபதம் அடைதலே முத்தி எனப்படும் (வைத்தியநாதன், 1995).

8. இசைவுத் தீர்வு

இசைவுத் தீர்வு (Arbitration) என்பது வழக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளின் உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நியமிக்கப்பட்ட இசைவுத் தீர்வாளர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


முடிவினைச் செய்தல். (வேங்கடாசலம், 2015). மலேசிய நீதி முறைமையில் இக்கலைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

9. இசைவுத் தீர்வாளர்

மலேசிய நீதி முறைமையில் இசைவுத் தீர்வாளர் (Arbitrator) எனும் கலைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இசைவுத் தீர்வு முறையில் வழக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் தங்கள் வழக்கைச் செவிமடுத்து தீர்ப்பு கூற இசைந்து தேர்தெடுக்கப்பட்டவர் (வேங்கடாசலம், 2015).

10. மத்தியஸ்தர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun PustakaTBainun ptbupsi

மேலும் மத்தியஸ்தர் (Mediator) எனும் கலைச் சொல் மலேசிய நீதி முறைமையில் கையாளப்பட்டுள்ளது. இரு தரப்பினரிடையே ஓர் இசைவைப் பெறுபவர் மத்தியஸ்தர் எனப்படுகின்றார். (பாலசுப்பிரமணியன், 2012).

11. வழக்குத் தீர்ப்பாளர்

வழக்குத் தீர்ப்பாளர் (Adjudicator) எனும் கலைச் சொல் மலேசிய நீதி முறைமையில் கானப்படுகின்றது. கட்டுமானத் துறைகளில் ஏற்படும் சிக்கல்களைக் உடனுக்குடன் தீர்க்க வழக்கு தீப்பாளர் வகை செய்வார். (வேங்கடாசலம், 2015).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இந்த இயல் ஆய்வு தொடர்பான முழுமையான கண்ணோட்டத்தை வழங்குகின்றது. இவ்வியல் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரங்கள், கலைச்சொல் விளக்கம் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ளது. ஆய்வுப் பின்னணியில் திருமுறை கண்ட புராண வரலாறும் மற்றும் பெரியபுராண வரலாறும் பேசப்பட்டுள்ளன.

ஆய்வுச் சிக்கலில் இன்றைய நவீன காலத்தில் நடு நிலையற்ற தன்மை காணப்படுவதையும் பெரியபுராண நீதி முறைமை தற்கால மலேசிய நீதி முறைமையோடு எத்தகைய ஒப்புவமை கொண்டது என்பதைப் பற்றியும் விவரிக்கின்றது. அதன் அடிப்படையில் மூன்று நோக்கங்களும் ஐந்து வினாக்களும் அமைக்கப்பட்டுள்ளன. பெரியபுராணம் காட்டும் நீதி முறைமை தமிழர் நல்வாழ்விற்கு வழித்துணையாக அமைவதோடு மட்டுமல்லாது அஃது இன்றைய நீதித் துறைக்கு எத்தகையப் பங்கினை ஆற்றியுள்ளது என்பது ஆய்வின் முக்கியத்துவமாக விளக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இவ்வாய்வு தொடர்பான கலைச்சொல் விளக்கங்களும் இந்த இயலில் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில் இவ்வியல் ஆய்வு தொடர்பான தெளிந்த பார்வையை ஏற்படுத்த வகை செய்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi